அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 15/99

எனது இல: ஆ1/2/2
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு-07.

1999.07..05...ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.37/92 இன் கீழ் சம்பளத் தொகுதி எச்2-1க்கு உரித்துடைய பதவியொன்றில் இருந்து சம்பளத் தொகுதி எச்2-2க்கு உரித்துடைய பதவியொன்றுக்கு தரமுயர்த்தப்படுமிடத்து சம்பளத்தை மாற்றியமைத்தல்.

---

மேற்படி சம்பளத் தொகுதிகளின் கீழான சம்பள அளவுத் திட்டங்கள் பின்வரும் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தப்பட்டுள்ளது.

1. எழுதுநர் சார்ந்த சேவைகள் மற்றும் சாரதியாளர் சேவைக்கு ஏற்புடையதாக 29/94, 29/94(1)ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் 1994.08.01 ஆந் திகதி தொடக்கம்,

11. தொழில்நுட்பவியல் தரங்களுக்கு ஏற்புடையதான 14/95 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மூலம் 1995.01.01 ஆந் திகதி தொடக்கம்.

111. அரச சேவையின் மற்றைய பதவிகளுக்கு ஏற்புடையதாக 33/95 மற்றும் 34/95 ஆம் இலக்கஅரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் மூலம் 1995.11.01 ஆந் திகதி தொடக்கம்,

1V. சில திணைக்களங்களுடனான பதவிகளுக்கு ஏற்புடையதாக 3/95 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி அமைச்சரவையினால் தீர்மானம் செய்யப்பட்ட திகதிகள் தொடக்கம்

அதன்படி திருத்தப்பட்ட சம்பள அளவுத் திட்டங்கள் பின்வருமாறு:

| சம்பளத் தொகுதி | அ.நி.சு.இல.37/92இன் கீழான சம்பளம் | திருத்தப்பட்ட சம்பளம் |
|---|---|---|
| எம்-2-1 | ரூபா 24120 -14x660-6x780 - 38040 | ரூபா 29400 - 5 x 660 - 11 x780 -41280 |
| எம்-2-2 | ரூபா 27420 -9x660 - 8 x 780 - 39600 | ரூபா 35640 - 6 x 780 - 9 x1200 -51120 |

02. மேற்படி 1994.08.01 தொடக்கம் 1996.12.31 வரையிலான இடைக்காலத்தில் செயற்பட்ட சம்பளச் சுற்றறிக்கைகளின் மூலம் சம்பளத் தொகுதி எம்-2-1 க்குரிய பதவியொன்றிலிருந்து சம்பளத் தொகுதி எம்-2-2க்குரிய பதவியொன்றுக்கு தரமுயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளங்களை 2/97(111)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி மாற்றியமைக்கும்போது சம்பளத்தில் முரண்பாடொன்று ஏற்பட்டிருக்கிறது.

03. இம்முரண்பாட்டை நீக்குவதற்காக சம்பந்தப்பட்ட காலப்பகுதியினுள் தரமுயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் அ.நி.சு.இல.37/92இல் குறிப்பிட்டுள்ள சம்பள அளவுத் திட்டங்கள் தொடர்ந்து நடைமுறைப்பட்டதாக உத்தேசமாகக் கொண்டு உயர்த்தப்பட்ட பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டத்திற்கு மீண்டும் மாற்றியமைக்கப்பட வேண்டும். அதன்பின் 1996.12.31ஆந் திகதிவரை சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றிருந்தால் அச்சம்பள ஏற்றங்களின் பெறுமதிகளையும் அ.நி.சு.இல.37/92 இன் கீழ் உத்தேச அடிப்படையின் கீழ் சேர்ந்து 1997.01.01 ஆந் திகதி தொடக்கம் 2/97(111)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நேரொத்த படிநிலையின் பேரில் 40% அதிகரிப்பின் கீழ் வைத்தல் வேண்டும். ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் 1997.01.01 ஆந் திகதியிலிருந்து ஏற்புடையதாகும் 40%வீத அதிகரிப்பின்கீழ் கொடுபட வேண்டிய சம்பளத்தை தீர்மானிப்பதற்காக திருத்தத்தின் அடிப்படையில் 1997.01.01 ஆந் திகதியிலிருந்து உரித்தாகும் சம்பளத்திற்கு 1996.12.31 ஆந் திகதி நேரொத்ததான உத்தேச சம்பளத்தை (அ.நி.சு.இல.2/97(111)இன் சம்பளத் தொகுதி ரீ-2-2 இன் கீழ் 2ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ள) இடுதல் வேண்டும்.

உதாரணம்:- 'ஏ' என்பவர் 37/92 ஆம் இலக்க அ.நி.சுற்றறிக்கையின் சம்பளத் தொகுதி எம்-2-1 க்குரிய சம்பள அளவுத் திட்டத்தில் 94.02.08ஆந் திகதி 28080/- ரூபா சம்பளப் படிநிலையை பெற்றார்.

29/94 ஆம் இலக்க அ. நி. சுற்றறிக்கையின்படி அந்தச் சம்பள அளவுத் திட்டம் 94.08.01 ஆந் திகதியிலிருந்து ரூபா 29400-5 X 660-11 X 780-41280 ஆக திருத்தப்பட்டது. அதன்படி 96.02.08 சம்பள ஏற்றமும் அடங்கலாக 35040/- ரூபா சம்பளப் படிநிலையைப் பெற்றுக் கொண்டிருந்தார். அவர் 96.09.30 ஆந் திகதி தொடக்கம் ரூபா 35640-6 X 780-9 X 1200-51120 சம்பள அளவுத் திட்டத்தையுடைய பதவியொன்றுக்கு தரமுயர்த்தப்பட்டார். அதன்படி பின்வருமாறு அவருக்கு சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது.

| திகதி | சம்பள அளவுத்திட்டம் | சம்பளப் படிநிலையில் | சுற்றறிக்கை |
|---|---|---|---|
| 1994.02.08 | ரூபா 24120- 14 X 660- 6 X 780-38040 | ரூபா 28080 | அ. நி. சு. இல. 37/92 |
| 1994.08.01 | ரூபா 29400-5 X 660- 11 X 780-41280 | ரூபா 33480 (சம்பளத்திருத்தம்) | அ. நி. சு. இல. 29/94 |
| 1995.02.08 | ------அதே-------- | ரூபா 34260 (சம்பள ஏற்றம்) | ------அதே------ |
| 1996.02.08 | ------அதே-------- | ரூபா 35040 (சம்பள ஏற்றம்) | ------அதே------ |
| 1996.09.30 | ரூபா 35640-6 X 780-9X 1200-51120 | ரூபா 36420 (சம்பள மாற்றியமைப்பு) | அ. நி. சு. இல. 29/9- மற்றும் 11/94 |
| 1997.01.01 | ரூபா 54480-9 X 1320 X 8 1560-78840 | ரூபா 55800* | அ. நி. சு. இல. 2/97 (111 |
| 1998.01.01 | ------அதே------------ | ரூபா 57120 (96.09.30 சம்பள ஏற்றத்துடன்) | ------அதே---- |

* 1997.01.01 திகதியிலிருந்து கொடுபடுகின்ற சம்பளம் 40% வீத அதிகரிப்பின் கீழ் அமையும். இவ் உத்தியோகத்தருக்கு பதவி உயர்வு கிடைக்கப்பெறாதிருந்தால் கிடைக்கக் கூடியதாக இருந்த சம்பளம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1994.02.08 | ரூபா 28080/- | (அ. நி. சு. இல. 37/92) |
| 1994.08.01 | ரூபா 33480/- | (அ. நி. சு. இல. 29/94) |
| 1995.02.08 | ரூபா 34260/- | (அ. நி. சு. இல. 29/94) |
| 1996.02.08 | ரூபா 35040/- | (அ. நி. சு. இல. 29/94) |
| 1997.01.01 | ரூபா 58440/- * | (அ. நி. சு. இல. 2/97(111) |
| 1997.02.08 | ரூபா 59760/- * | (அ. நி. சு. இல. 2/97(111) |

* 1997.01.01 ஆந் திகதி தொடக்கம் வழங்கப்படும் சம்பளம் 40% வீத அதிகரிப்புக்கு உட்பட்டதாகும்.

இச்சம்பள மாற்றம் உத்தேச நிலையில் மீளத்தயாரிக்கப்படுகையில் இவ்வாறு அமையவேண்டும்:

பதவி உயர்வுகள் நடைமுறைப்படமுன் ஏற்புடையதாகவிருந்த சம்பளஅளவுத் திட்டம்

(எஸ்-2-1 அ.நி.சு.37/92) - ரூபா 24120-14X660-6X780-38040

பதவி உயர்வுகள் நடைமுறைப்படமுன் பெற்றுக் கொண்டிருந்த சம்பளப்படிநிலை - ரூபா.29400.00

அ.நி.சு.11/94இன்படி உழைத்துப் பெற்றுக் கொண்ட பங்கு அடங்கலான சம்பளம் - ரூபா.29823.00

உயர்த்தப்பட்ட பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்:- - ரூபா 27420-9X660-8X780-39600

(எஸ்-2-2 - அ.நி.சு.இல.37/92)

பதவி உயர்வின் கீழ் மாற்றியமைத்தபோது கிடைக்கின்ற சம்பளம்:- ரூபா 30720.00

1997.01.01ஆந் திகதியில் நேரொத்த சம்பளமாக ரூபா 55300 பெறப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கான புதிய நேரொத்த சம்பளம்:-

(அ.நி.சு.2/97(111) - ரூபா 61080.00

1997.01.01 ஆந் திகதியிலிருந்து கொடுபடவேண்டிய சம்பளம்: ரூபா 54348.00
(40% வீத அதிகரிப்பின் கீழ்)

(1996.12.31 க்கு நேரொத்த சம்பளம் ரூபா 39,540/-ஆக கருதப்பட்டுள்ளது.)

1997-09-30 (சம்பளம் ...) !- ரூபா 55668'00

1998.01.01 இருந்து கொடுபடவேண்டிய சம்பளம்-ரூபா 62400.00
(சம்பள ஏற்றம் உழைத்துப் பெறப்பட்டிருந்தால் மட்டும்)

04. மேலே 3ஆம் பந்தியின் கீழ் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு 1996.12.31திகதி வரை தற்போதைக்கு செலுத்தப்பட்டுள்ள சம்பளத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தலாகாது.

05. பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம் : (பி.ஏ.சேனாரட்ன)
செயலாளர்.
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.